நென்மேலி ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திருமதி.கு.கலாவதி

ந.க.எண். 107 /2023 நாள். 13.03.2024

பொருள் - குடியிருப்பு மனைப்பிரிவு- மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - நென்மேலி ஊராட்சி மற்றும் கிராமம் - DTCP ம.வ./ந.ஊ. இ.எண். ஆன் லைன் விண்ணப்ப எண் 1K3ERPDJ ல் அமைந்துள்ள சர்வே எண்: 167/1,2,3,4,7B,168/1,170/5,171/2A,3,4 ல் 17498 சதுர மீட்டர் இடத்தினை குடியிருப்பு மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.தானப் பத்திரபதிவு ஆவண எண் 2685/2022 நாள்:12-09-2023
2.உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ROC No:1K3ERPDJ
3.இவ்வலுவலக ந.க.எண். 0002-/2024/நாள் 19.01.2024
4.நகர் ஊரமைப்பு இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் ஒப்புதல் எண்:206/2023/நாள்:25-09-2023
5.தீர்மானஎண் 222/ 29.12.2023

****

உத்தரவு -

பார்வை 1-ல் காணும் நென்மேலி ஊராட்சி - நென்மேலி கிராமம் DTCP ம.வ./ந.ஊ.இ.எண். 206/2023, ஆன் லைன் விண்ணப்ப எண் 1K3ERPDJ ல் அமைந்துள்ள சர்வே எண் 167/1,2,3,4,7B,168/1,170/5,171/2A,3,4ல் 17498 சதுர மீட்டர் இடத்தினை குடியிருப்பு மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க வரைபடத்துடன் கூடிய ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்.

பார்வை 2 ல் காணும் நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 63.0 ச.மீ பொது உபயோகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 66.0ச.மீ, உத்தேச சாலைக்கான மூலை முடக்கு உட்பட தானம் தரப்பட்ட பகுதியை மட்டும் நென்மேலி ஊராட்சிக்கு பார்வை எண் 1ல் காணும் தானப்பத்திர ஆவண எண்2685/2022 மூலம் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 4 ல் காணும் செலுத்த வேண்டிய தொகை கீழ் குறிப்பிட்ட கட்டணங்கள் உரிய அரசு தலைப்பில் ஊராட்சி கணக்கில் கட்டணம் பெறப்பட்ட நாள் 19.01.2024 ல் செலுத்தப்பட்டுள்ளது.செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - நென்மேலி ஊராட்சி மற்றும் கிராமம், நென்மேலி கிராமம் மனைப்பிரிவு ம.வ./ ந.ஊ.இ.எண். 206/2023 நாள் .25/09/2023 ஆன் லைன் விண்ணப்ப எண் 1K3ERPDJ ல் அமைந்துள்ள சர்வேஎண் 167/1,2,3,4,7B,168/1,170/5,171/2A,3,4ல் 17498 சதுர மீட்டர் இடத்தினை 82மனைகள் அடங்கிய மனைப்பிரிவிற்கு பார்வை 5 ல் காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைப்பிரிவு அங்கீகார எண் மா.வ./ ந.ஊ.து.இ.(செ.மா)எண்.206/2023 நாள்:25-09-2023 ஆன் லைன் விண்ணப்ப எண் 1K3ERPDJ ன் படி அங்கீகாரம் வழங்கப்பட்டதை தொடர்ந்து கீழ்காணும் விவரப்படி

For SUBHAKRIPA HOMES PRIVATE LIMITED

Director

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்

	பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	17498 ச.மீ	-
ஒதுக்கிய மனைகள்	82 மனைகள்	
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி பொதுஉபயோகம்	66.0 ச.மீ	0.55%
தமிழ்நாடுமின் உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.		
தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.	63.0 ச.மீ	0.53 %
உத்தேச சாலைக்கான மூலை முடக்கு உட்பட.	5680 ச.மீ	
பூங்கா விற்காக ஒப்படைக்கப்பட்ட பகுதி	1205 ச.மீ	10.20 %

பார்வை 5 ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகளின் மேல் அதிகார வரம்புக்குள் திட்ட அனுமதி வழங்கப்படும் உத்தேசங்களுக்கு மேற்காணும் விதிகளை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தளர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நென்மேலி ஊராட்சி - நென்மேலி கிராமம் குடியிருப்பு மனைப்பபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க ரூ87500/-(ரூபாய் என்பத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) SNA NENMELI PANCHAYAT என்ற பெயரில் செலுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் பார்வை 5 ல் காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்காணும் விவரப்படியான மனைகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

K. Kalavathi
தலைவர் நென்மேலி
K.கலாவதி
ஊராட்சி.
தலைவர்
நென்மேலி ஊராட்சி மன்றம்
திருக்கழுக்குன்றம் ஒன்றியம்
செங்கல்பட்டு மாவட்டம் - 603 003.

நிபந்தனைகள்

1. மனுதரார் தெரு விளக்கு அமைத்துக்கொள்ள வேண்டும்.
2. மனுதாரர் பைப் கல்வெட்டு அமைக்கப்பட்டு தார் சாலை போடப்பட்டுள்ளது இவற்றை மாற்றி சிமெண்ட் கல்வெட்டு அமைக்க வேண்டும்.
3. மனுதாரர் சிமெண்ட் கான்கிரீட் கால்வாய் அமைக்க வேண்டும் ஆனால் பைப் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது இதை மாற்றி அமைக்க வேண்டும்.
4. மனுதாரர் ஊராட்சிக்கு வளர்ச்சி கட்டணமாக ரூ.349960/.SNA Nenmeli VP 224368 என்ற கணக்கிற்கு Demond Draft வழங்க வேண்டும்.
5. மனுதாரர் கழிவு நீரை தங்கள் இடத்திலேயே நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.
6. மனுதாரர் மற்றவர்களின் இடத்திற்கு செல்ல தடை ஏதும் செய்யக்கூடாது.
7. இவைகள் அனைத்தும் சரியான முறையாக செய்யவில்லை என்றால் இந்த இறுதி ஒப்பதல் மற்றும் அங்கீகாரம் இரத்து செய்யப்படும்

இணைப்பு :

1.அங்கீகரிக்கப்பட்ட வரைபட 3 நகல்.

For SUBHAKRIPA HOMES PRIVATE LIMITED

Director